அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல :20/2001

எனது இல :ஆ1/35
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2001.09.12 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின்**
**15 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்.**

1998.01.30 ஆந் திகதிய 3/98 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவு மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

(அ) தற்போது உள்ள 15:1(1) மற்றும் (11) ஆம் உபபந்திகளை நீக்கி பின்வரும் உபபந்திகளை பதிலீடு செய்வதன் மூலம்,

15:1:(1) கடமையின் தன்மையையும், பொறுப்புக்களையும் கவனத்திற் கொண்டு அவசியப்படும் பதவிகள் தொடர்பாக மட்டும் வினைத்திறன் காண் தடையொன்றை/தடைகளை ஆட்சேர்ப்புத் திட்டத்தில்/சேவை பிரமாணத்தில் உள்ளடக்க வேண்டும்,

15:1:(11) சம்பள அளவுத் திட்டத்தை விதித்துரைக்கும் போது அதன் 04 ஆம் சம்பளப் படிநிலையை அடைய முன் முதலாம் வினைத்திறன்காண் தடையில் சித்தியடைய வேண்டுமென்பதையும், இரண்டாம் வினைத்திறன்காண் தடையொன்றை விதித்துரைப்பதாயின் 07 ஆம் சம்பளப் படிநிலையை அடைய முன் அதில் சித்தியடைய வேண்டுமென்பதையும் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 15 :1 (X) ஆக புதிய உபபந்தியொன்றை சேர்ப்பதன் மூலம்,

15:1(**X**) 45 வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து விளக்களிக்கப்படாததுடன், ஆட்சேர்ப்புத் திட்டங்களிலோ சேவை பிரமாணங்களிலோ வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளிலிருந்து விளக்களிப்புச் செய்யும் ஏற்பாடுகளை உள்ளடக்கக் கூடாது.

02. 45 வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்திபெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவதாக தொடர்புடைய ஆட்சேர்ப்பு திட்டத்தில் அல்லது சேவை பிரமாணத்திற் தற்போது ஏற்பாடுகள் உள்ள பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு இச் சுற்றறிக்கை நடைமுறைப்படும் திகதிக்கு முன் 45 வயது பூர்த்தியாகுமாயின் அவ்வலுவர்களை அவ்வேற்பாடுகளின் பேரில் வினைத்திறன்காண் தடையிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

03. தற்போது நடைமுறையில் உள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களில் அல்லது சேவை பிரமாணங்களில் 45 வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடையிலிருந்து விலக்களிக்கும் ஏற்பாடுகள் இருந்தாலும் இச்சுற்றறிக்கை நடைமுறைப்படும் திகதியில் இருந்து அவ் ஏற்பாடுகள் ஒழிந்துவிடுவதுடன், அத்தகைய அலுவலர்கள் வினைத்திறன்காண் தடையிலிருந்து சித்தியடைய வேண்டும், 45 வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடையிலிருந்து விலக்களிக்க உரித்து இருந்தும் இச்சுற்றறிக்கை நடைமுறைபடுவதால் அந்த உரித்தை இழக்கின்ற அலுவலர்களுக்கு குறித்த வினைத்திறன் காண் தடையில் சித்தியடைவதற்காக இச் சுற்றறிக்கை நடைமுறைப்படும் திகதியிலிருந்து சலுகை முறையில் 3 வருட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அக்காலத்திற்குள் வினைத்திறன்காண் தடையில் சித்தி பெற்றால் அவ்வாறு சித்திபெற்ற திகதி அல்லது 45 வயது பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டில் முன்னராக அமையும் திகதியை குறித்த பரீட்சையில் சித்திபெற்ற திகதியாக கருத வேண்டும். இவ்வலுவலர்களுக்கு வினைத்திறன் காண் தடைக்கு மேலாக வேதனவேற்றங்களை செலுத்த வேண்டியது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டுமே ஆகும்.

04. தற்போதைக்கு வேதனவேற்றங்கள் பின்போடப்பட்டுள்ள எதிர்வரும் 3 வருடங்களுக்குள் 45 வயது பூர்த்தியாகும் அலுவலர்கள் இச்சுற்றறிக்கை நடைமுறைப்படும் திகதியில் இருந்து 03 வருடங்களுக்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தால் அவ்வாறு சித்தியடையும் திகதி அல்லது 45 வயது பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டில் முன்னராக அமையும் திகதி வினைத்திறன்காண் தடை பூர்த்தியாகும் திகதியாக கருதப்படும். 3 வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வேதனவேற்றங்களை பின்போடல் பரீட்சையில் சித்தியடையும் வரை நடைமுறைப்படும்.

05. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2001 ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைபடுத்தப்படும்.

எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு.